**செய்தி வெளியீடு எண்: 90/2025** **நாள்: 31.10.2025**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் இரண்டாம் கட்டம் வழித்தடம் 4-ல் இரட்டை அடுக்கு பிரிவுக்கான கடைசி U-Girder நிறுவப்பட்டது**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், இரண்டாம் கட்டம் வழித்தடம்-4-ல், போரூர் முதல் பவர்ஹவுஸ் வரையிலான உயர்மட்ட வழித்தட கட்டுமானத்தில், வயலாநல்லூர் வார்ப்பு நிலையத்தில் (Casting Yard) 100% முன்வார்ப்புப் பணிகள் (Precast Works) நிறைவடைந்ததன் மூலம் ஒரு முக்கியமான மைல்கல்லை எட்டியுள்ளது. திட்டத்தின் இந்தப் பகுதி மிகவும் சிக்கலான பிரிவுகளில் ஒன்றாகும். இங்குள்ள பொறியியல் மற்றும் தளவாட சவால்கள் (engineering and logistical challenges) பலவற்றை இந்தச் சாதனையின் மூலம் வெற்றிகரமாக கடந்துள்ளோம்.

இந்த மெட்ரோ இரயில் திட்டத்தில், 9 மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் 8 கிலோமீட்டர் தூரத்திற்கான மேம்பாலப் பாதை அமைக்கும் பணிக்குத் தேவையான, பாலத்தின் பாகங்கள், தூண்களின் மேல் பாகங்கள் (U-Girders, I-Girders, Pier Caps, Pier Arms, and Parapets) போன்ற 25 வெவ்வேறு வகையான 3,410 காங்கிரீட் கட்டமைப்புகள் முன்னரே தயாரித்து முடிக்கப்பட்டுள்ளன. இதில், 4 மெட்ரோ இரயில் நிலையங்கள் கொண்ட முக்கியமான 4 கி.மீ. நீளத்தில் அமையவுள்ள இரட்டை அடுக்கு மேம்பாலப் பகுதியும் அடங்கும்.

இந்த குறிப்பிடத்தக்க சாதனையில் தோராயமாக 1,22,137 கன மீட்டர் (cubic meter) கான்கிரீட், 18,470 மெட்ரிக் டன் (Metric Ton) இரும்பு கம்பி (reinforcement steel) என மொத்தமாக 2,42,455 மெட்ரிக் டன் எடையுள்ள பிரீகாஸ்ட் (precast) கட்டுமானப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டன. இது, இந்தத் திட்டத்தின் பிரம்மாண்டத்தையும், துல்லியத்தையும், செயல்பாட்டின் வேகத்தையும் வெளிப்படுத்துகிறது. இப்பணியின் முழு செயல்களும் உரிய பாதுகாப்புடன் மேற்கொள்ளப்பட்டது.

இந்த மைல்கல் நிகழ்வில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் திரு. தி. அர்ச்சுனன், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை பொது மேலாளர்கள் திரு. எஸ்.அசோக் குமார், (வழித்தடம் மற்றும் உயர்மட்ட கட்டுமானம்), திருமதி. ரேகா பிரகாஷ், (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு), AEON Consortium நிறுவனத்தின் குழுத் தலைவர் திரு. C. முருகமூர்த்தி, லார்சன் & டூப்ரோ நிறுவனத்தின் உயர்மட்ட கட்டுமான பிரிவின்

தலைவர் திரு.மணீஷ் குமார் அகர்வால், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், பொது ஆலோசகர்கள் மற்றும் L&T நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இந்த நிகழ்வின் போது உடன் இருந்தனர்.

**வெளியீடு: மக்கள் தொடர்பு துறை,**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**